| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

( New Syllabus )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. தமிழ் உயர்மொழி தனிமொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க கூறுவன யாவை ?

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

4. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

5. ஈகைப் பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை தருக : $3 \times 4 = 12$

6. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் உரைப்பன யாவை ?

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதை நாலடி எங்ஙனம் நயம் நவில்கிறது ?

9. தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

10. அகழ்வாய்வால் வெளியிடப்பட்ட கட்டடங்கள் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** (இருபது வரிகளின் மிகாது) விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. நாடு, சமயம், சாதி, இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு. வி. க. வாதிடுவதனை விளக்குக

12. 'மனித வாழ்வே பெரியது' என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

**IV.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'ஆயா'* அல்லது *'சட்டை'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'பால் வண்ணம் பிள்ளை' அல்லது 'மகன்'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'ஓர் உல்லாசப் பயணம்'* அல்லது *'மண்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

கடற்கரையோரமாக ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் தலைவிரிகோலத்தோடு, இளம் பச்சிளம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடலில் வீச ஓடினாள் பெண் ஒருத்தி நில் என்ற குரல் எங்கிருந்தோ ஒலித்தது ................திரும்பினாள் ............... கற்பனையாக ஒரு கதை எழுதுக.

*அல்லது*

'நீ உருப்படமாடமாட்டாய்' தண்டச்சோறு என நிதம் பாட்டு வாங்கிய 'பொன்மணி' என்ற பெண்- படித்துப் பட்டம் பெற்று வாழ்க்கையில் உயர்ந்ததாகக் - கற்பனையாக ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை எழுதி எதுகை, மோனை, தொடை, சந்தம், உவமை, உருவகம், அணி, கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. $1 \times 10 = 10$

"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
    கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
    பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
    நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
    என்னுயிர் என்பேன் கண்டீர்.

– பாவேந்தர் பாரதிதாசன்.

VI. பின் வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. $3 \times 2 = 6$

16. Man proposes God disposes.
17. Familiarity breeds contempt.
18. Knowledge is power.
19. Strike while the iron is hot.
20. Do not add fuel to the flame.
21. Education should develop and promote good values.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து ( பத்து வரிகளில் ) எழுதுக. $1 \times 4 = 4$

அ) காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

இ) பார்க்காத பயிரும் கேட்காத கடனும் பாழ்.

அல்லது

*'வெண்ணிலா'* அல்லது *'புதிய பாரதம் மலரட்டும்'*

என்னும் தலைப்பில் ஒரு கவிதை வரைக.

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. $10 \times 1 = 10$

**23.** புலி வந்தன. எருதுகள் ஓடியது.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

**24.** வாழை பழத்தை தின்ற பின் தோலை சாலையில் போடாது குப்பை கூடையில் போடு.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக )

25. டயாபெட்டிக் பேஷண்ட், ஸ்வீட், ப்ரூட்ஸ் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.

( பிற மொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

26. காகம் கத்த குயில் சத்தமிட கழுதை கத்தியது.

( மரபு வழுக்களை நீக்கி எழுதுக).

27. சோறு கொதிக்கிறது, போத்தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக ).

28. பரவை இறையாகப் பயிரு வகைகளைத் திண்ணும்

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

29. அலை - அளை அல்லது அரண்-அரன்

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக).

30. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா ?

( கொச்சையான வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக).

31. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.

( பிறமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக).

32. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது என்று என் தந்தை சொன்னார்.

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).